சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்13,இல்லார்க்கு நாமே உறவு! எல்லோர்க்கும் உதயமே வரவு!எனும் தலைப்பில்10 கருணை இல்லங்களுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், சி.மகேஷ்குமார் தலைமையில், மாவட்ட இளைஞர்அணி சார்பில், 10 கருணை இல்லங்களுக்கு நல உதவிகள் அரசு தலைமைக்கொறடா .கா.ராமச்சந்திரன் வழங்கினார். நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மேயர் பிரியா, ஐ.சி.எஃப்.வ.முரளிதரன், நாகராஜன், மகேஷ்குமார் உள்ளனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில், தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் காசநோயில்லா தமிழகத்திற்கான விழிப்புணர்வு பதாகையினை வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் (ஒன்றிய அரசு) ஹர்ஷ் மங்களா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் (தமிழ்நாடு அரசு) மரு.அருண்தம்புராஜ். பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (காசநோய்) கூடுதல் இயக்குநர் மரு.ஆஷா ஃபெட்ரிக் மற்றும் மருத்துவர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசின் திட்டங்கள் மக்களைச் சென்று சேருவதை அரசு அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும்!

அனைத்துத் துறை அலுவலர்களும் - பொதுமக்களின் மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!

வேலூர் – இராணிப்பேட்டை மாவட்டங்களின் – அரசுப் பணிகள் ஆய்வுக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

வேலூர், டிச. 8-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தின்போது, பொதுமக்களுக்காக சிறப்பாக சேவையாற்றிய அரசு அலுவலர்க ளுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 6.12.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர் திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞர் கனவு இல்லத் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திடீராய்வு மேற்கொண்டு, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த மனுதாரர்களிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களது கோரிக்கை விவரங்கள் குறித்து கேட்டறிந்ததுடன், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடன் நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழகம் முழுவதும் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறதா என்பதை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். இதற்காகத்தான் 'முதமைச்சரின் முகவரி' என்ற தனித்துறையையே முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். இன்றைய தினம் மனுதாரர்களிடம் அலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது போன்று தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு வரும் மனுக்கள்மீது உரிய விசாரணைகள் மேற்கொண்டு, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில்தான் திட்டங்களைத் தீட்டுகிறோம். அவை முறையாக பொதுமக்களுக்குச் சென்று சேர்வது அலுவலர்களின் கைகளில்தான் இருக்கிறது. அதை நீங்கள் தான் உறுதிப்படுத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அலுவலர்கள் வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் மக்களுக்கு அரசுத்திட்டங்களின் கீழ் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தைப் பாராட்டி வட்டாட்சியர் தே.முரளிதரன் அவர்களுக்கும், சிறப்பாக மருத்துவ சேவை வழங்கிய திருவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக மருத்துவ நல அலுவலர் திருமதி.எம்.ராணி அவர்களுக்கும், அணைக்கட்டு வட்டத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக ஆசனாம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் டி.சரவணன் அவர்களுக்கும் நற்சான்றிதழ் மற்றும் கேடயங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிக தேர்ச்சி விகிதத்தை அளித்த அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மின்னல் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியை பாராட்டி தலைமையாசிரியர் திருமதி.வ.கு.சாரதா அவர்களுக்கும், சிறப்பாக மருத்துவ சேவை வழங்கிய கொடைக்கல் ஆரம்ப சுகாதார நிலை யத்திற்காக மருத்துவ நல அலுவலர் கு.கோபிநாத் அவர்களுக்கும், சிறப்பாக சேவை வழங்கிய சுமைதாங்கி நகர கூட்டுறவு கடன் சங்கத்தை பாராட்டி செயலாளர் கண்ணன், தனி அலுவலர் தயாளன் ஆகியோருக்கும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணியாற்றியதற்காக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பூ.சரவணகுமார் ஆகியோருக்கும் துணை முதலமைச்சர் அவர்கள் நற்சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன்,

திருமதி அமுலு விஜயன், ஜெ.எல்.ஈஸ்வரப்பன், அ.செ.வில்வநாதன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.சுனில் குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, (வேலூர்), முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, (ராணிப்பேட்டை), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை துணைச்செயலாளர் மு.பிரதாப் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமை எல்.பிரபு! வே.கருணாநிதி - கோல்டு டி.பிரகாஷ் வரவேற்புரை!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

சென்னை, டிச.8

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அ வர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கருத்தரங்கம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் எல். பிரபு தலைமையில் பகுதி செயலாளர் வே.கருணாநிதி எம்.சி. , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரையில், கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஸ்வரன், எஸ். ஜெகதீப், தே. ஜெகன் தேவேந்திரன், வே. சங்கீதா ஆகியோர் முன்னிலையில் இன்று (08.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி எஸ்.எஸ். மஹரால் பம்மல் மெயின் ரோடு பம்மலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கருத்தரங்கை தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

டி ஆர் பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, க. செல்வம் எம்.பி., தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் மீ.அ. வைத்தியலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கழக மாணவர் அணி தலைவர் இரா.ராஜீவ் காந்தி, பரிதி இளம் சுருதி எம்.சி., இளம் பேச்சாளர் நா. அருண் ஆகியோ கருத்தரங்கில் உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், த. துரைசாமி, து.மூர்த்தி, வெ. விஸ்வநாதன், ஜீ. தமிழ்மணி, என். இதயவர்மன், ஆர். டி. அரசு, பட்ப்பை மனோகரன், க. வசந்தகுமாரி, கோ. காமராஜ், செம்பருத்தி துர்கேஷ், க. அன்பு செல்வன், ஜி. சி. அன்பு செழியன், ஆதிமாறன், த. ஜெயக்குமார், இரா. பொண்ணுராம், அ. தமிழ்மாறன், சாய் ஜெயன் பாரதி, ந.நவீன் , இரா. தமிழரசன், எஸ். கே. நெப்போலியன், வி. ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

பம்மல் நகர மாணவரணி அமைப்பாளர் எஸ். வெங்கடேஷ், துணை அமைப்பாளர் மு.சதீஷ், அமைப்பாளர் ஏ செந்தில்குமார் ஆகியோர் நன்றி யுரை ஆற்றுகின்றனர்.

எஸ்.முரளி முன்னிலை! பா.பொன்னுசாமி தலைமையில்

171 அ வட்டத்தில் அறுசுவை உணவு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, டிச.08-

மயிலை கிழக்குப் பகுதி 171 அ வட்ட கழகம் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பா. பொன்னுசாமி தலைமையில், எஸ்.முரளி, திருமதி கீதா முரளி எம்.சி. முன்னிலையில் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள் சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., 171 அ வட்டக் கழக சார்பில் பட்டினம்பாக்கம் சீனிவாசபுரம் மற்றும் எஸ். கே.பி. புரம் ஆகிய இடங்களில் இன்று (8.12.24 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணி அளவில் அரிசி உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு வட்ட கழகத்தைச் சேர்ந்த மாவட்ட பகுதி கழக வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாகப்பொருப்பாளர்கள், பாக உறுப்பினர்கள், கழக முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக்கழக செயலாளர் பா.பொன்னுசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

டி.நரேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில்– துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

மதுரவாயல் 153 வது வட்டத்தில் உணவு - நலத்திட்ட உதவிகள்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ - தி.சார்லஸ் வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 8

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.நரேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 1048 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் மாற்றுத்திறனாளிக்கு மிதிவண்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (8.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணிக்கு, போரூர், ஆர்.ஈ.நகர், 8 வது தெருவில் நடை பெறுகி றது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, 153 வது வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவி களை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டி செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், பொதுக்குழு உறுப்பி னர் இராமாபுரம் வ. செல்வகுமார் எம்.சி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இராமாபுரம் செ.ரவி, சங்கர் கணேஷ் எம்.சி, பகுதி துணைச் செயலாளர் இரா. பால்பாண்டியன், பகுதி அவைத் தலைவர் பி.எம்.செல்வராஜ், மாமன்ற உறுப்பி னர் சாந்தி ராமலிங்கம், மாவ ட்டப் பிரதிநிதி கோ. ராமலிங்க ம், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.பா. உதயகுமார் மற்றும் மாவ ட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சினை சிறப்பிக்கின்றனர்.

டி.அசோக்குமார் தலைமை! கே.கண்ணன் எம்.சி - மு.இராசா எம்.சி. முன்னிலை!

137 வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ - க.தனசேகரன் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, டிச. 8

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் இன்று (8.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, கலைஞர் நகர் டாக்டர் காணு நகர் பகுதியில் நடைபெறுகிறது. பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. அசோக்குமார் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.இராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் 137 வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆலங்குடி செல்வராஜ், சகாய பெபிலா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர், சென்னை மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம், தொகுதி பார்வையாளர் வே. உமாகாந்த், த. அரங்கநாதன்,

தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தலைமையில்

தியாகராயர்நகர் 130 வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ - கே.ஏழுமலை எம்.சி. வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 8

தியாக ராயர்நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் டி.கமல் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (8.12.2024 - ஞாயிறு) காலை 11 மணியளவில், வடபழனி ஆண்டவர் கோயில் தெரு மற்றும் பாலாஜி அவென்யூ ஆகிய இரு இடங்களில் பொதுமக்கள் சுமார் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தியாக ராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு அன்னதானம் வழங்குகின்றனர்.

இதில் எம்.பழனிகிராமணியார், என்.ராமகிருஷ்ணன், 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர், வி.மணி, கே.சரவணன், தமிழ் எம். பழனி, ஜி.ஜி.சேகர், எஸ்.ஆனந்தன், ஏ.கே.காசிம், என்.சுந்தரம், எஸ்.சரவணன், கே. பாபுஜி, எஸ்.விஜயலட்சுமி, வி.குமார், ஆர்.வி.ரத்திணசாமி, ஜி.தண்டபாணி, ஆர்.சதாசிவம், ஆர்.விஜய் ராமகிருஷ்ணன், சி.சுந்தர், இ.ஜெயக்குமார், எல்.கணேஷ், குழந்தைவேலு, டி.ஜி.சீனிவாசன், எம். கிருஷ்ணன், சி.மகேஷ், பி. ஸ்ரீதர், டி.ரவி, சி.எஸ்.அசோகன், எஸ்.கோபி, வி.ஹரி, ந. அசோக், ஹரிவேலவன், ஜெயக்குமார், ஜெ.பழனி, ஜி. பழனி, அஜ்மல்கான், ஆர். மணி, ஜெயச்சந்திரன், முருகேசன், தில்லை சி.பாஸ்கர், வெற்றிவேல், பிரசாந்த், சுரேஷ், லோகநாதன், கன்னியப்பன், அருள் சேகர், செந்தில்குமார், பாலாஜி, நித்தியானந்தன், ஜெயந்தா, டி.சித்ரா தேவி, விஜயலட்சுமி, சி.செல்வி, டைலர் ராஜி, டில்லி பாபு, கே.கோபி, மகேஷ் மற்றும் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு டி.கமல் கேட்டுக்கொண்டுள்ளார்.

வே. வெற்றிவேல் தலைமையில்

125 'அ' வட்டத்தில் அறுசுவை உணவு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!!

சென்னை, டிச.08-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 'அ' வட்டத்தின் சார்பாக மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (8.12.24 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12.00 மணி அளவில் மயிலை மாங்கொல்லை மற்றும் கச்சேரி சாலையில் ருசி ஹோட்டல் அருகில் ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

125 'அ' வட்டச் செயலாளர் வே. வெற்றிவேல் தலைமையில், கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முனுசாமி, என்.இளங்கோ, டி.தினகர், ஏ.ஆர்.அமுல்ராஜ், டி. வின்சன்ட், டொமினிக், ரஞ்சிதம், எல்.ஆர்.சுரேஷ், கார்த்திக், சரவணகுமார், மைக்கேல் அகஸ்தியன், தர்மபால், கமல், டெய்லர் ரமேஷ், சிவா, சுகுமார், செல்வகுமார், சூசை அம்மாள், லோகா, மரியா, வினோத், விஷால், சாமுவேல் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, கீழ்ப்பாக்கம், ஓசான்குளம் திட்டப் பகுதியில் பழைய அடுக்குமாடிக் குடியிருப்பை இடித்து அகற்றிவிட்டு, அவ்விடத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டப்படவுள்ளதை அடுத்து, பழைய குடியிருப்பில் குடியிருந்து வந்த 288 குடும்பங்களுக்கும் புதிய குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்ட பின் அதில் வீடு வழங்குவதற்கான தற்காலிக ஒதுக்கீடு ஆணை மற்றும் கருணைத் தொகையைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார். இந்நிகழ்வில் புரசை எஸ்.குமார், ந.கலையரசன், வெ.மருதன், மா.காந்தி, கே.சீனிவாசன், பு.சதிஷ்குமார், P.M.ஜெயலட்சுமி, புஷ்பராஜ், குணசேகரன், நாகராஜ், விஜய தேவராஜ், கோமகன், எட்டு என்ற விஜயகுமார், பாக முகவர் கவிதா, அசினா பேகம், குணா, வெங்கடேசன், சந்துரு, காமேஷ், நாகவள்ளி, தனம்மாள், வள்ளியம்மாள், நாகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி ஜல்லடையான் பேட்டை 191 வது வட்டத்தின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் பொதுக்கூட்டம் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி வட்ட செயலாளர் ஜி.ரவி தலைமையிலும் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் கழக பேச்சாளர் மதுரை ஜீவா மற்றும் மகிழவன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் நா.சந்திரபாபு, மாவட்ட துணை செயலாளர் மு.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் எம். கே.ஏழுமலை, பகுதி நிர்வாகிகள் வி.தனசேகரன் , வே.வி.குமரேசன் , கே.டி.ரவி, வட்ட கிழக செயலாளர்கள் வ.பாபு எம்.சி, ஆர்.நாகராஜ் , த.ராஜேந்திரன் , ,ஆரோன் , பா.தேவகுமார், அவர்களும் பகுதி கழக வட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.